# அன்னை பூபதி
# தமிழ்க் கலைக்கூடம்

## தமிழ்மொழி
## ஆண்டிறுதிப் பரீட்சை
## ஆனி 2012

## ஆண்டு 9

பெயர்: ____________________

வகுப்பு: ____________________

புள்ளிகள்: ____________________

____________________ ____________________

(ஆசிரியர் ஒப்பம்) (பெற்றோர் ஒப்பம்)

## ① மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. உடலின் இயக்கத்திற்கு உயிர் அமைவதுபோல், சொல்லின் இயக்கத்திற்கு மூலமான ஒலிகளாக அமைவன
   அ) பெயரொலிகள் ஆ) வினையொலிகள் இ) உயிரொலிகள்

2. க், ச், ட், த், ப், ற் என்ற மெய்களை ஒலி அடிப்படையில் கூறுவது
   அ) மெல்லினம் ஆ) வல்லினம் இ) இடையினம்

3. 'நிறைகுடம் தளம்பாது' என்பதன் பொருள்
   அ) விடாப்பிடி ஆ) வீண்பெருமை இ) அறிவின் அடக்கம்

4. 'பாசறை' என்பதன் ஒத்தகருத்துச் சொல்
   அ) போர்வீரர் தங்குமிடம் ஆ) விடுதி இ) வீடு

5. பெயற்சொல்லில் வரும் சினைப்பொருளிற்கு ஓர் எடுத்துக்காட்டு
   அ) கருமை ஆ) சிலை இ) வால்

6. மகாகவி உருத்திரமூர்த்தி எழுதிய கவிதை ஒன்று
   அ) நாராய் நாராய்... ஆ) மப்பன்றிக் காலமழை காணா மண்ணில்..
   இ) போற்றினும் போற்றுவர்...

7. மகாவம்சம் என்ற நூலை எழுதியவர்
   அ) மகாநாமதேரர் ஆ) விசயன் இ) துட்டகெமுனு

8. தமிழ்ப்பண்பாடு, தமிழியலிதழ் என்ற ஆங்கிலச் சிற்றிதழை வெளியிட்டவர்
   அ) பாரதியார் ஆ) சுப்புரத்தினம் இ) தனிநாயகம் அடிகளார்

9. ஏதிலி என்ற சொல்லின் ஒத்தசொல்
   அ) கதியற்றவர் ஆ) பணக்காரர் இ) சுகவீனமுற்றவர்

10. யாழ்ப்பாண அரசின் கடைசி மன்னன்
    அ) சங்கிலியன் ஆ) பண்டாரவன்னியன் இ) எல்லாளன்

11. பிறமொழிகளிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்கள்
    அ) திரிசொல் ஆ) வடசொல் இ) திசைச்சொல்

12. இணைமொழித்தொடருக்கு எடுத்துக்காட்டு
    அ) குறுகுறு ஆ) பென்னம்பெரிய இ) பழக்கவழக்கம்

13. பெயர்ச்சொற்களின் பொருளை வேறுபடுத்துவது
    அ) வேற்றுமை ஆ) உவமைத்தொடர் இ) புணர்ச்சி

14. வாழை + குருத்து என்பதைப் புணர்த்தினால்
    அ) வாழைகுருத்து ஆ) வாழைருத்து இ) வாழைக்குருத்து

15. தாயின் தாலாட்டு என்ற பாடலில் காணப்படும் பண்பு
    அ) மடைமை ஆ) சிரிப்பு இ) நாட்டுப்பற்று

16. வெளிநாட்டவராலும் புகழ்ந்து போற்றப்படுகின்ற சிறப்புமிக்க நூல்
    அ) மகாவம்சம் ஆ) திருக்குறள் இ) ஆத்திசூடி

17. மாறுபாடு (விகாரம்) தவிர்ந்த பகுபதஉறுப்புகள் அனைத்தையும் கொண்டுள்ள சொல்
    அ) பார்த்தான் ஆ) வந்தேன் இ) பார்த்தனன்

18. மண் + வெட்டி = மண்வெட்டி என்பது
    அ) இயல்புப்புணர்ச்சி ஆ) விகாரப்புணர்ச்சி இ) தோன்றல்புணர்ச்சி

19. தமிழ் மக்களின் சிறந்த பண்பாடுகளில் ஒன்று
    அ) திருடி வாழ்தல் ஆ) விருந்தோம்பல் இ) பணம்சேர்த்தல்

20. தமிழ்மொழியை நாம் கற்பதற்கான முக்கிய கரணியம்
    அ) இனஅடையாளத்தை இழக்காதிருக்க
    ஆ) பலமொழி அறிவு உள்ளதெனக்காட்ட
    இ) பெற்றோரின் கட்டாயத்திற்காக.

(20புள்ளிகள்)

**② அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.**

1. அம்மா ______________________உணவு பரிமாறினாள்.
   (சுடச்சுட, அழகாக, மடமட)

2. ஆடலழகி ______________________களைப்படைந்தாள்.
   (மொழுமொழு, ஆடியாடி, கடகட)

3. மாணவன் ______________________பாடசாலைக்குச் சென்றான்.
   (கூட்டங்கூட்டமாக, தன்னந்தனியே, மந்தமந்தையாக)

4. தெருவோரத்தில் ______________________மரங்கள் நின்றன.
   (கடகட, பென்னம்பெரிய, சொரசொர)

5. நற்பண்புடையாரது நட்பு ______________________ மனதுக்கு இனிமை தரும்.
   (பழகப்பழக, ஓடஓட, கலகல)

(5 புள்ளிகள்)

**③ பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" என்ற கூற்றிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

2. தனிநாயகம் அடிகளார் தமிழிற்குச் செய்த தொண்டுகள் இரண்டு தருக?

3. 'இன்று தமிழினம் படும் அவலங்களுக்கு மகாவம்சம் ஒரு மூலகரணியம்.' இக்கூற்றினை விளக்குக.

4. 'இன்று தமிழினம் படும் அவலங்களுக்கு இலங்கையில் நடைபெற்ற அந்நிய நாட்டவரின் ஆட்சியும் பெரும்பங்கு வகிக்கிறது.' இக்கூற்றினை விளக்குக.

5. அல்பேர்ட் சுவைட்சரை வியக்க வைத்த தமிழர் பண்பாடுகள் இரண்டு தருக.

6. ஒரு மாவீரன் எவ்வாறு இறப்பதை விரும்புவான்?

7. பணம் செய்யும் கேடுகள் யாவை?

(10 புள்ளிகள்)

## ④ இலக்கண வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. தமிழில் இரட்டைக்கிழவி, அடுக்குத்தொடர் எனப்பல மொழிவளங்கள் உள்ளன. இவற்றை ஏன் பயன்படுத்துகின்றோம்.

2. தமிழில் சொற்களின் அமைப்பைக்கொண்டு, கருத்தமையப் பிரிக்கக்கூடிய சொல், கருத்தமையப் பிரிக்க முடியாத சொல் என வகுப்பர். இதற்கு இலக்கண முறைப்படி வழங்கும் பெயர் யாது? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

3. இலக்கண வகையால் தமிழ்மொழியிலுள்ள சொற்கள் எத்தனை வகை? அவை எவை?

4. உயிரெழுத்துகள் ஒலி அடிப்படையில் எத்தனை வகையாகும்? அவை எவை?

5. தமிழ்மொழியிலுள்ள வினைச்சொற்களின் சிறப்பு யாது?

6. வினா எழுத்துகள் ஐந்தினையும் தருக.

7. மாறுபடு புணர்ச்சியின் (விகாரப்புணர்ச்சி) மூன்று வகையையும் எடுத்துக்காட்டுடன் தருக.

(10 புள்ளிகள்)

**⑤ பேச்சுவழக்கைச் செவ்வழக்காக மாற்றி எழுதுக.**

1. நாங்க விளையாடி களைச்சுப் போயிட்டம்.

2. அங்க ஏதோ ஒலி கேக்குது.

3. என்ர அம்மாக்கு காலில நிகம் உடைஞ்சு போச்சு.

4. தம்பி சோத்தை கொட்டிப் போட்டு அழுகிறான்.

5. மாறனுக்கு சாப்பாட்டில நல்ல விருப்பம்.

(10 புள்ளிகள்)

⑥ **பாடலைப் படித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

**தமிழர் மானம்**

தமிழர் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடைமொழியாகும்
அன்பே அவனது வழியாகும்

அறிவின் கடலைக் கடைந்தவனாம்
அமிர்தம் திருக்குறள் அடைந்தவனாம்
பொறியின் ஆசையைக் குறைத்திடவே
பொருந்திய நூல்கள் உரைத்தவனாம்

1. தமிழனது வழி என்ன?

______________________________

______________________________

2. பாடலில் கூறப்படும் அறநூல் யாது?

______________________________

______________________________

3. தமிழனுடைய மொழி எத்தகையது?

______________________________

______________________________

4. ஐம்பொறிகள் எவை?

______________________________

______________________________

5. நாம் எந்த இனத்தவர்?

______________________________

______________________________

(10 புள்ளிகள்)

⑦ **வாழிடமொழியில் தரப்பட்ட பந்தியைத் தாய்மொழியில் மாற்றி எழுதுக.**

Facebook er et nettsamfunn, opprinnelig laget for universitetsstudenter og ansatte i USA. Nettstedet ble startet av Mark Zuckerberg. Det er et sosialt nettverk, der brukeren kommuniserer ved at en profil blir opprettet. Der kan man skrive om seg selv, legge ut bilder og samtidig snakke med andre. Nettsamfunnet har mer enn 500 millioner aktive brukere på verdensbasis. Brukere lager en profil som inneholder personlig informasjon, bilder og interesser. Tjenesten er gratis for brukeren.

(10 புள்ளிகள்)

## ⑧ கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

**1. புலம்பெயர் நாட்டில் நான்**

- வாழிடச்சூழல்
- தாயகச்சூழல்
- பண்பாடு (சடங்குகள், உணவு, உடை .... )
- உறவுகள்
- பன்மொழி அறிவு
- தமிழின அடையாளம் பேணல்
- தாயகவாழ்க்கை முறை - புலம்பெயர் வாழ்க்கை முறை ஒப்பிட்டு உமது கருத்து

**2. நீர் பார்த்து இரசித்த அல்லது படித்து இரசித்த ஒன்றைப் பற்றி எழுதுக.**

- கதையின் உள்ளடக்கம்
- கவர்ந்ததன் நோக்கம், சிறப்பு
- உமது கருத்து

**3. தாய்மொழியைக் கற்பதற்கும், வாழிட மொழியைக் கற்பதற்கும் இடையில் ஏற்படும் சிறப்புகளையும், சவால்களையும் ஒப்பிட்டு ஆராய்க.**

- தாய்மொழியின் சிறப்பு
- வாழிடமொழியின் சிறப்பு
- தாய்மொழி - வாழிடமொழியைக் கற்பதனால் ஏற்படும் சிறப்பு
- தாய்மொழி - வாழிடமொழியைக் கற்பதில் ஏற்படும் சிரமம்
- உமது கருத்து

(25 புள்ளிகள்)